# 10. "கலையிலிருந்து தொழில்வடிவமாக இசைக்கலை" இலங்கைக் கல்விப்புலத்தினைத் தளமாகக் கொண்ட ஓர் ஆய்வு

***சுகன்யா அரவிந்தன்***

## *முன்னுரை*

உலகப் பண்பாட்டு நிலைகளில் வாழுகின்ற இனக்குழுமங்கள் ஒவ்வொன்றும், தமக்குரிய மரபு விழுமியங்களுக்கு ஏற்பத் தமது இசைமரபுகளை வடிவமைத்துக் கொள்கின்றன. ஒவ்வொரு சமூகத்தின் பண்பாட்டுக் கூறுகளுள் இசை ஒரு முக்கிய இடத்தினைப் பெறுகின்றது.

இலங்கையில் தமிழ் பேசும் சமூகம், கலையோடு ஒன்றிப் பிணைந்த அமைப்பினைக் கொண்டது. இச்சமூகத்தினர் சமய நம்பிக்கைகளும் வழிபாட்டு முறைகளும் சார்ந்த கலைக்குரிய அடித்தளத்தை அமைத்தனர். இதிலிருந்து இசை, நடனம், கூத்து, நாடகம், சித்திரம், சிற்பம் எனப் பல கலைகள் தோன்றவும் வளரவும் தொடங்கின.

இலங்கையைப் பொறுத்தவரையில் தமிழ் மக்கள் வாழும் பகுதிகளாக மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணம் என்கின்ற இடங்கள் காணப்படுகின்ற பொழுதிலும் குறிப்பாகத் தமிழ்மக்கள் செறிந்து வாழும் பகுதியாக இலங்கையின் வடபகுதியாகிய யாழ்ப்பாணம் விளங்குகின்றது. இது புவியியல் ரீதியாகத் தென்னிந்தியாவுக்கு அருகில் இருக்கின்ற காரணத்தினாலும் இவ்விரு நாடுகளுக்கிடையிலே ஏற்பட்ட தொடர்பின் காரணமாகவும் தென்னிந்தியாவில் வழக்கிலிருக்கக் கூடிய பண்பாட்டுக் கலை, கலாச்சார மரபுகள் யாழ்ப்பாணத்திலும், பின்னர் இலங்கையின் பல பாகங்களுக்கும் பரவக்கூடிய வாய்ப்புகள் அதிகம் இருந்தன.


எந்த ஒரு நாடும் சுதந்திரத்தின் பின், தனது பண்பாட்டுத் தனித்துவங்களுடன் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்வது வழக்கம்.

***முனைவர் திருமதி சுகன்யா அரவிந்தன்***, *சிரேஷ்ட விரிவுரையாளர், இசைத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை. saravintnon @hotmail.com +94 773 166799*

இந்தவகையில் இலங்கை வரலாற்றிலும் சுதந்திரத்தின் பின்னான காலக்கட்டங்களில் பல துறைகளிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்களும் வளர்ச்சிகளும் ஏற்பட்டன. இலங்கையின் சுதந்திரக் காலமாகிய 1948 ஆம் ஆண்டிலிருந்து ஐம்பது ஆண்டுகால வரலாற்றினை, அதாவது 1998 வரையான காலப்பகுதியினை ஆய்வுப் பரப்பாகக் கொண்டு இந்த ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.




படம் 1



படம் 2

## இலங்கைத் தமிழ்ப்பண்பாட்டில் இசைக்கலை மரபுக் கூறுகள்

இலங்கைத் தமிழ் சமூகத்தின் அனைத்துக் கலைகளுக்கும் ஆலயங்களும் அங்கு நிகழும் வழிபாட்டு முறைகளும் தோற்றுவாய்களாக இருந்திருக்கின்றன. ஆரம்பக் காலங்களில் இலங்கையில் கோயில்கள் சார்ந்தே கலைகள் வளர்ந்தன.

*ஊர் மூத்த நயினாரைக் கோவில்தனி லுறையவைத்தங் குண்மையாகச்*
*சீர்பூத்த சந்திரசேகரன்பூசை செய்யவெனச் செப்பி நாளும்*
*ஏர் பூத்த பொற்பணங்க ளறுபத்தொன் றீந்துதிருப் பூசைக்கென்று*
*வார் பூத்த முலைமடவார் தங்களோடு பரராச மன்னன் வாழ்ந்தான் (97)*

*தன்கோட்டைக் கருகாக வன்னியநா தரனயங்கட் சார வைத்துப்*
*பின்கூட்ட முடன்வாழும் பரிசைகத்திக் காரரையும் பெலமதாக*
*மன்கூட்ட வரசுகா வலன்கணக்கன் முதலோரை மருங்கில் வைத்துப்*
*பண்கூட்டச் சாதியெல்லா மோரிடமாய் வடபாகம் பயிலச் செய்து (98)*

*எந்நாளு மிம்முறையே யாவரையும் வாழ்வீரென் றிருத்தி யங்கண்*
*மன்னான விளவலெனுஞ் சங்கிலியை வாவெட்டி சாரச் செய்து*
*முன்னோர்க்குப் புரிபூசைநிதந்தெரிசித் தேமுள்ள வளையாமூரில்*
*மன்னான விரவிகுலப் பரராச சேகரனும் வாழ்ந்தா னன்றே* *(99)*[1]

என்கின்ற வையாபாடல் அடிகளும்,

*சித்திரமறையோர் வீதி சிறந்திடும் வண்ணையூர்க்குக்*
*கத்னாம் வைத்தீசர்க்குக் கனத்ததோர் நடனஞ்செய்யும்,*
*குத்திர மனத்தாளகுங், கொடியிடை, கனகி நூற்குப்*
*பித்தனாயுலா மராலிப் பிள்ளையான் காப்பதாமே*[2]

என்கின்ற கனகி புராணக் காப்புச் செய்யுளும், கோயிற் சூழலில் கலைஞர்கள் வாழ்ந்திருக்கின்றார்கள், அவர்களது தொண்டு ஆலயத்துக்கு முக்கியமாக இருந்திருக்கின்றது என்பதற்கான சிறந்த வரலாற்றாதாரங்களாக விளங்குகின்றன. ஈழத்துச் சிதம்பரபுராணம் வாய்ப்பாட்டு, நாட்டியக் கலைஞர்கள் கோயில் சூழலில் கலைஞர்கள் வாழ்ந்திருக்கின்றனர் என்பதற்குத் தகுந்த சான்று பகர்கின்றது.

இவர்கள் இசை பாடுதல், இசைக்கருவி வாசித்தல், மட்டுமல்லாது பூமாலை கட்டுதல், மார்கழி மாத வீதிப்பஜனை செய்தல் போன்றவற்றிலும் ஈடுபட்டிருந்தனர்.

ஆலயங்களில் இசைக்கப்படுகின்ற இசைக்கருவிகளுள் தவில், நாதஸ்வரம் மட்டுமன்றி வகை வகையான மணிகள், சங்குகள் போன்றவற்றை இசைப்பதற்கும் உரியவர்கள் இருந்தார்கள். இவர்கள் பெரும்பாலும் யாழ்ப்பாணத்தின் இணுவில், அளவெட்டி, மாவிட்டபுரம், மல்லாகம் போன்ற இடங்களில் பாரம்பரியமாக வசித்து வருகின்றனர்."[3] என்கின்ற சோமாஸ் கந்த சர்மா அவர்களது 'ஆலயங்களில் வாத்தியக் கருவிகள்' என்னும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்டு, யாழ்ப் பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற அடிகள், இத்தகைய இசைச்சமூகத்தினர் யாழ்ப்பாணத்தின் குறித்த சில இடங்களில் பரம்பரையாக வாழ்ந்து கலைச்சேவையாற்றி வந்திருக்கின்றார்கள் என்பது தெரிய வருகின்றது. மேலும், இன்றும் இப்பகுதிகளில் இசை வேளாள சமூகத்தினர் நிறைந்து வாழ்வதற்கு இதுவே காரணமாக அமைகின்றது என்று கொள்ளலாம்.

யாழ்ப்பாணத்தின் சில ஊர்களின் பெயர்களும் கூட அங்கு வாழும் சாதியினரைக் குறிக்கும் காரணப்பெயர்களாக அமைந்து விடுவது வழக்கம். குறிப்பாக, இன்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 'பனிப்புலம்' என்னும் ஊரிலும் இசைக்கலைஞர் கூட்டம் அதிகளவில் வாழ்ந்து வருகின்றார்கள். இதற்கு பேராசிரியர் வி. சிவசாமி அவர்கள் எழுதிய 'யாழ்ப்பாண அரசில் இசை' என்னும் கட்டுரையில், 'பனிலம்' என்பது சங்கு இசைக்கருவியைக் குறிப்பதாகவும், இது மருவி பனிப்புலமாக வழங்கி இருக்கலாமோ என்றும் கருத்துத் தெரிவிக்கின்றார்.

இவ்வாறு கோயில் சார்ந்து வழங்கி வந்த இசைக்கலை மரபுகள், பின் தமிழ்ப்பண்பாட்டு நிகழ்வுகளிலும் பங்கெடுக்க ஆரம்பித்தன. இல்லங்களில் பொதுவாக நடைபெறக்கூடிய வைபவங்கள் யாவற்றுக்கும் மங்கள இசையாக நாதஸ்வரம், தவில் பயன்படுத்தப்பட்டு வருவது வழக்கமானது.

இந்த வகையில் இலங்கைத் தமிழர் பண்பாட்டு மரபில் தோன்றி வளர்ந்த இசைக்கலை மரபுகள் தமிழ்ச்சமூகத்தின் சில பண்பாட்டுக் கூறுகளின் அடிப்படையில் வைத்துப் பின்வருமாறு நோக்கப்படுகின்றன.

மேலும் தேவதாசி மரபு, கூத்துமரபு, இசை வேளாளர் மரபு, ஓதுவார் மரபு, இசைக்கருவிகள் மரபு, புராணபடனம், கதாப்பிரசங்கம் இவற்றின் தோற்றமும் வளர்ச்சியும், இலங்கையின் சித்தர் மற்றும் அருளாளர்கள் பாடல்களின் தோற்றம், வளர்ச்சி, இவை பரவிய விதம் முதலிய விவரங்களின் மூலம் சோழர் காலத்திலிருந்தே இசைக்கலையானது தோற்றம் பெற்றுப் படிப்படியாக வளர்ச்சியடைந்து இன்றும் யாழ்ப்பாணத்திலே ஆங்காங்கே தொடர்கின்ற தன்மையினை நாம் அறியலாம்.

**கல்விப்புலங்களிலே இசை**

1930களில் இலங்கையிலே நிலவியிருந்த சின்னமேள மரபு, இசைநாடக மரபு என்பவற்றில் ஏற்பட்ட சமூகத்தளம் பல்நிலைமாறி 1930களின் இறுதியில் இலங்கைக்கு இரவீந்திரநாத் தாகூர் மற்றும் அவரது குழுவினரின் வருகையும், அதன் மூலம் சமூகத்தில் ஏற்பட்ட விழிப்புணர்வும் முயற்சிகளும் இசைக்கலையைச்சமூகத்தில் தரமுயர்த்துவதற்கான செயற்பாடுகளை இலங்கைத் தமிழ்ச்சமூகத்தினரிடையே ஏற்படுத்தியிருந்தன.[5]

இவ்வாறு சமயச்சடங்குகளிலும், வாழ்வியல் பண்பாட்டு நிலைகளிலுமே இசை ஒரு கருவியாகப் பயன்படுத்தப்பட்ட நிலை சற்று மாற்றம் பெற்றுச் செம்மைப்படுத்தப்பட்ட வடிவமாக இசைத்துறை

வளர்க்கப்படவேண்டும் என்கின்ற முனைப்பு இலங்கைத்தமிழ் மக்களிடையே இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்தில் (கிபி 1945) தோற்றம்பெற்றது.

இசையில் ஆர்வம் கொண்டவர்கள் பலரும் தமிழகம் சென்று, குறிப்பாக அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சென்று கற்றுச் சங்கீதபூஷணங்களாக இலங்கை திரும்பினர். இக்காலப் பகுதியே இலங்கையில் கல்விப்புலத்தில் இசை முறையாகப் பரப்பாக்கம் செய்யப்படத் தொடங்கிய காலம் எனலாம்.

இலங்கை மீண்ட சங்கீத வித்துவான்கள் தாம் கற்றவற்றை மற்றவருக்கும் போதிக்கத் தொடங்கினர். தனியார் மன்றங்கள் தோற்றம் பெற்றன. இசைவிழாக்கள் முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டன. அரங்கேற்றங்கள் பல நிகழ்ந்தேறின. தேவதாசியரின் நிகழ்வுகளிலும் கோயில் சடங்குகளிலும் தொடர்ந்து பிற்காலத்தில் தேவதாசியரது நிகழ்வுகள் நிறுத்தப்பட்டுக் கதாகாலேட்சபங்கள் புராணபடனங்கள் எனச் சமயம் சார்நிகழ்வுகளில் கட்டுண்டு கிடந்த இக்கலைக்கூறுகள் இக்காலத்தின் பின் (1945களின் பின்) செம்மைப்படுத்தப்பட்ட வடிவமாகக் கல்விப்புலத்தினூடாக மக்களிடையே பரப்பப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி மற்றும் சேர் பொன். இராமநாதன் போன்ற கலை ஆர்வலர்களின் முயற்சியினால் அரசின் ஆதரவும் இக்கலை வடிவங்களுக்குக் கிடைக்கத்தொடங்கின. 1952இல் இலங்கை ஆட்சியாளர்களின் விருப்பின் பேரில் “இலங்கைக் கலைக்கழகம்” என்கின்ற பெயரில் ஒரு அமைப்பானது இலங்கைப் பாராளுமன்ற ஆணைச்சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டது. இதுவே இசைக்கலையானது தொழில்சார் நிலையில் மாற்றம் பெறுவதற்கான முதற்கட்டமாக அமைந்தது என்று கூடச் சொல்லமுடியும்.

இந்த அமைப்பானது காலத்திற்குக் காலம் உள்நாட்டுக் கலாச்சாரங்களைப் பாதுகாக்கவும், கலை கலாச்சார உதவிகளைக் கலைஞர்களுக்கு செய்யவும் முன்வந்தது.[6] (www.cultural.gov.lk)

இவ்வகையான அரசின் முன்னெடுப்புகள் காலப்போக்கில் பாடசாலைகளில் இசைக்கலையினை ஒரு பாடமாகக் கல்வித்திட்டத்தில் இணைத்துக் கொள்வதற்கு வாய்ப்பாக இருந்தது.

1952ஆம் ஆண்டிலிருந்து இலங்கைப் பாடசாலைகளில் இசை ஒரு பாடமாகப் போதிக்கப்படத் தொடங்கியது. ஆயினும், பொதுப் பரீட்சைகளுக்குரிய பாடமாக இசை அன்று இணைத்துக்கொள்ளப்படவில்லை.

*1962*இல் இலங்கையின் பொதுப்பரீட்சைகளுக்குரிய (பொதுத்தராதர சாதாரண தரம்) பாடமாக இசைக்கலை அறிமுகப்படுத்தப்பட்டது.

இதன்போது, பாடத்திட்டங்களைத் தயார்ப்படுத்துவது, ஆசிரியர்களை நியமிப்பது, நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்குவது, அவர்களின் கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வது போன்ற பல தேவைகள் நிர்வாக ரீதியிலே ஏற்பட இதற்கான முன்னெடுப்புக்கள் அரசினால் முன்னெடுக்கப் படவேண்டிய தேவை ஏற்பட்டது. இதன் பயனாக ஆசிரியப் பயிற்சிக்கலாசாலைகள், ஆசிரிய ஆலோசகர்கள், கல்வி அதிகாரிகள் எனக் கல்வி நிருவாக அலகுகள் இசைத்துறை சார்ந்து முன்னெடுக்கப்பட்டன. தமிழகத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று இலங்கை மீண்டவர்கள் அரசினால் மேற்படி பொறுப்புக்களுக்கு நியமிக்கப்பட்டு வேதனம் வழங்கப்பட்டது.

இது பிற்காலத்தில் இலங்கைப் பல்கலைக்கழகங்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட, பட்டப்படிப்பிற்கான துறையாக இசைத்துறை மேம்பாடடைய வழிகோலியது. பாடசாலைகளில் இசைக்கலையினைக் கற்ற மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்று பட்டதாரிகளாகச் சமூகத்தில் இடம்பிடித்தனர். ஏனைய கல்வியியற் துறைகள் போலப் பல்கலைக்கழக ஆய்வியல் நிலைக்கு இசைக்கலையும் கல்விப்புலத்தில் தரம்மிக்க ஒரு துறையாக மேம்பாடடைந்தது. இசைக்கலையினைக் கற்று வெளியேறிய இசைக்கலைப்பட்டதாரிகள் அரசு பாடசாலைகளிலே இசை ஆசிரியர்களாக நியமனம் பெற்றனர். மாதாந்தர வேதனம் தரக்கூடிய துறையாக இசைக்கலை மாற்றம்பெற்றது. இலங்கையில் இரண்டு பல்கலைக்கழகங்களில் (கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) கர்நாடக இசையானது பட்டப்படிப்பிற்கான துறையாகப் பல்கலைக்கழகக் கல்வித்திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளது. பல்கலைக் கழகங்களிலிருந்து இதுதவிர, கொழும்பு கட்டுபுல நுண்கலைப் பல்கலைக்கழத்தில் சிங்கள இசைக்கற்கை நெறிகளும் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன. அத்துடன் கர்நாடக இசையையும் சிங்கள மாணவர்கள் இங்குப் பயிலுவதற்குச் சந்தர்ப்பங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

ஆலய வழிபாடுகளிலிருந்து கல்விப் புலத்திற்கான துறையாக, தொழில் வாண்மை தரக்கூடிய துறையாக இசைக்கலை மாற்றம் பெற்றது. இத்தகைய மாற்றத்தினைக் கொண்டுவருவதற்கு ஏறக்குறைய 30தசாப்த கால முயற்சி தேவையாக இருந்தது.

**முடிவுரை**

இலங்கையைப் பொறுத்தவரையில் ஆரம்பக் காலங்களில் சடங்குகளோடு கூடிய பண்பாட்டுக் கலைவடிவமாக இசைக்கலை சமூகத்தில் பயன்பாட்டிலிருந்தது. இதன்போதும் கலைஞர்களுக்கு வருமானம் கிடைத்திருந்தாலும் கூட, பின் வந்த காலங்களில் கல்விப்புலத்தினூடாக கற்றலுக்கான, ஆய்வுக்கான துறையாக இசைக்கலை சமூகத்தில் மாற்றம் கொள்கின்ற பொழுது சமூகத்தில் ஒரு தரம்மிக்க வருமானமீட்டக்கூடிய தொழிலாக மாற்றம் பெற்றுக்கொள்வதைக் காண முடிகின்றது. ஒரு காலத்தில் இசைக்கலைஞர்கள் ஒரு சடங்கில் பங்கு கொள்பவராக அல்லது மகிழ்வை ஊட்டுபவராகக் (Entertainer) கருதப்பட்ட நிலை மாற்றம் பெற்றுச் சமூக மரியாதையுடன் கூடிய வருமானமீட்டித் தரக்கூடிய ஒரு தொழில் வடிவமாக மாற்றம் பெற்றிருப்பது கண்கூடு.

**அடிக்குறிப்புக்கள்**

1. வையா பாடல் - யாழ்ப்பாணம் செகராச சேகர மகாராசாவின் சமஸ்தான வித்துவான் வையாபுரி ஐயர் செய்தது - பதிப்பாசிரியர் - கலாநிதி க செ நடராசா - கொழும்புத் தமிழ்ச்சங்க வெளியீடு - 1980 - பக் - 56-57.
2. கனகி புராணம் - நட்டுவச் சுப்பையனார் - பதிப்பாசிரியர் வட்டுக்கோட்டை, மு. இராமலிங்கம், சுதந்திரன் அச்சகம் கொழும்பு - 1961 - விநாயகர் காப்பு பக் - 4.
3. ஆலயங்களில் வாத்தியக்கருவிகள்- ப்ரம்மஸ்ரீ சோமாஸ்கந்த சர்மா - யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத்துறைக்கு முதுதத்துவமாணி பட்டத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடு: 1994: பக் 38.
4. 'யாழ்ப்பாண அரசில் இசை' - பேரா. சிவசாமி - சிந்தனை Vol 111, யாழ் பல்கலைக்கழகக் கலைப்பீட வெளியீடு -1994 பக் 25 5. ஈழகேசரி : 07-12-47
6. www.cultural.gov.lk

**உசாத்துணைநூல்கள்**

1. *வையா பாடல் - யாழ்ப்பாணம் செகராச சேகர மகாராசாவின் சமஸ்தான வித்துவான் வையாபுரி ஐயர் செய்தது - பதிப்பாசிரியர் - கலாநிதி க செ நடராசா - கொழும்புத் தமிழ்ச்சங்க வெளியீடு - 1980.*

2. *கனகி புராணம் - நட்டுவச் சுப்பையனார் - பதிப்பாசிரியர் வட்டுக்கோட்டை, மு. இராமலிங்கம், சுதந்திரன் அச்சகம் , கொழும்பு - 1961.*

3. *ஆலயங்களில் வாத்தியக்கருவிகள்- ப்ரம்மஸ்ரீ சோமாஸ்கந்த சர்மா - யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத்துறைக்கு முதுதத்துவமானி பட்டத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடு: 1994 .*

4. *'யாழ்ப்பாண அரசில் இசை'- பேரா. சிவசாமி - சிந்தனை* Vol *111, யாழ் பல்கலைக்கழகக் கலைப்பீட வெளியீடு - 1994.*

5. *யாழ்ப்பாணம் - சமூகம் - பண்பாடு - கருத்துநிலை - பேரா. சிவத்தம்பி - :1985.*

6. *யாழ்ப்பாணத்து மரபுக்கல்வியும் பண்பாடும் : முனைவர் பேரா. சபா. ஜெயராசா : சேமமடு பதிப்பகம் : 2006.*

7. *"பாடவிதானவிருத்தி" - விஜே மன்னே ஈ.எல். : இலங்கையில் கல்வி நூற்றாண்டு விழா மலர் 111 - இலங்கை கல்வி கலாசார வெளியீட்டு அமைப்பு : 2014.*

8. *ஈழகேசரி பத்திரிகைகள்.*

9. *இந்து சாதனம் பத்திரிகைகள்.*

10. *யாழ்ப்பாணத்து வாழ்வியற் கோலங்கள் : கலாநிதி எஸ் சிவலிங்கராசா : குமரன் புத்தக இல்லம் - 2003.*